செ.வெ.எண்.61/2018 நாள்: 05-02-2018

**காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் புத்தாக்க அறிவியல் கண்காட்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம் மூலம் 2016-17, 2017-18ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதிற்கு கண்காட்சி நடைபெற்றது. மாணவர்களின் இக்கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொடங்கி வைத்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர், தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் மூலம் பள்ளி மாணவர்களிடம் அறிவியல் ஆய்வு ஆர்வத்தை தூண்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்டத்திலும் புத்தாக்க அறிவியல் கண்காட்சி (Inspire Award) நடத்தி அதில் மாவட்ட அளவில் சிறந்த படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் தேசிய அளவில் நடத்தப்படும் அறிவியல் கண்காட்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இக்கண்காட்சியில் தேர்வு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக காட்சிப் பொருளை காட்சிப்படுத்துவார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்டுள்ள அரசு / நகராட்சி / மெட்ரிக் / கேந்திரியாவித்யாலயா பள்ளிகளில் பயிலும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 92 மாணாக்கர்கள் பள்ளி அளவில் தேர்வு செய்யப்பட்டு, அம்மாணவர்களை இணையதளத்தில் பதிவு செய்து, அவர்களில் சிறந்த படைப்புகளை செய்யவுள்ள மாணவர்களுக்கு தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் மூலமாக 2016-17ம் கல்வியாண்டிற்கு தொகை 5,000/-ம், 2017-18ஆம் கல்வியாண்டிற்கு தொகை 10,000/-ம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை மூலமாக அப்பள்ளிகளின் அறிவியல் ஆசிரியர்களின் உதவியுடன் அறிவியல் திறமையை வெளிப்படுத்தும் கண்காட்சிப் பொருளை தயாரித்து, புத்தாக்க அறிவியல் கண்காட்சியில் காட்சிப் பொருளாக பார்வைக்கு வைத்துள்ளனர். அவர்களில் முதல் பரிசு 1 நபருக்கும், இரண்டாம் பரிசு 2 நபருக்கும் மூன்றாம் பரிசு 3 நபருக்கும் ஆறுதல் பரிசாக 12 நபர்களுக்கும் ஆக மொத்தம் 18 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். தேர்வு செய்யப்பட்ட சிறந்த படைப்புகள் தேசிய அளவில் நடத்தப்படும் அறிவியல் கண்காட்சிக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். ஆண்டுதோறும் நடைபெறும் இக்கண்காட்சியை மாணவ-மாணவிகள் தன் திறமைகளை வெளிப்படுத்த கிடைத்துள்ள ஒரு நல்ல வாய்ப்பாக எண்ணி, பங்கேற்று பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.ரெ.திருவளர்செல்வி, தேசிய புத்ததாக்கு அமைப்பு திரு.ரிஷி ராஜ் சர்மா, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் திரு.ச.தயாளன், மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.கே.ஏகாம்பரம், திரு.ஸ்ரீ.ரமேஷ், மாவட்ட கல்வி அலுவலர் (பயிற்சி) திருமதி.ப.மகேஸ்வரி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**